கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்/நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

சங்கரன்கோவில்,

**முன்னிலை : செல்வி.பவித்ரா. G, எல்.எல்.பி.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி/**

**நீதித்துறை நடுவர்**

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் நாள் சனிக்கிழமை

**C.C.No.90/2024**

**CNR.No.TNTS08 – 000207–2024**

அரசுக்காக: காவல் உதவி ஆய்வாளர்,

சங்கரன்கோவில் டவுண் காவல் நிலையம்

(சங்கரன்கோவில் டவுண் காவல் நிலைய குற்ற எண்.487/2014)

……... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

பரமசிவன், (வயது 27/2014)

த/பெ.ஆறுமுகம்,

தெற்கு தெரு,

நெடுங்குளம் ……. எதிரி

| | | |
|---|---|---|
| 1. | Case Number | CC.90/2024 |
| 2. | Name of the Police Station and Crime Number | Sankarankovil Town Police Station<br>Crime No.487/2014 |
| 3. | Name of the Accused | Paramasivan |
| 4. | Date of Occurrence | 15.07.2014 |
| 5. | Date of Complaint | 16.07.2014 |

| | | |
|---|---|---|
| 6. | Date of Arrest | 16.07.2014 |
| 7. | Period of remand | 16.07.2014 to 24.07.2014 (9 days) |
| 8. | Date of release on bail | 24.07.2014 (condition bail) |
| 9. | Date of filing final report | 18.12.2014 |
| 10. | Date of Commencement of trial | 10.10.2025 |
| 11. | Date of Chief examination | PW1 06.03.2026<br>PW2 06.02.2026 |
| 12. | Date of Cross examination | PW1 06.03.2026<br>PW2 06.02.2026 |
| 13. | Date of Conclusion of trial | 06.03.2026 |
| 14. | Plea of the accused | Not guilty |
| 15. | Finding of the Court | The accused is found not guilty for the offences u/s. 451, 294(b), 506(2) IPC and is acquitted u/s. 248(1) of Cr.P.C. |

இந்த வழக்கானது 06.03.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, அரசுக்காக குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை –1 திரு.S.பரணீந்தர் அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.காந்திகுமார் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு கோப்புக்களையும், சாட்சிய சான்றாவணங்களையும் நன்கு பரிசீலினை செய்தும், இதுநாள் வரை என் ஆய்விலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்....

## தீர்ப்புரை

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:**

கடந்த 15.07.2014 ம் தேதி 15.30 மணிக்கு காந்திநகர் 3 ம் தெருவில் உள்ள வாதியின் வீட்டில் எதிரியாகிய பரமசிவம் என்பவர் நுழைந்து அரசு தரப்பு பட்டியல் சாட்சி 1 ஐ பார்த்து " ஏய் தேவிடியா முண்ட ஒழுங்கா என்னோட வாழ வாராயா இல்லையா, அப்படி வாழ வரவில்லை என்றால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று" மிரட்டியதாக தெரிவித்து எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 294(பி), 506(1) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களை இழைத்துள்ளதாக குற்றஞ்சாட்டி சங்கரன்கோவில் டவுண் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிக்கு, இந்நீதிமன்றத்திலிருந்து கு.வி.மு.ச.204 பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் எதிரி ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச.207 பிரிவின்படி இலவசமாக வழங்கப்பட்டன.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர், இந்நீதிமன்றத்தால் கு.வி.மு.ச 240(1) பிரிவின்படி, எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 451, 294(பி), 506(2)ன் கீழ் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை பொறுத்து விளக்கி வினவியபோது, எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்துக் கூறினார். எனவே, எதிரிக்கு எதிரான அரசுத் தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. இந்நிலையில், இந்த வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில், நிகழ்நிலைபுகார்தாரரான துரைபதி என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கபட்டுள்ளார். மேலும் இவ்வழக்கில் புலன்விசாரனை அதிகாரிக்கு பதிலாக சங்கரன்கோவில் டவுண் காவல்நிலைய இரண்டாம்நிலை காவலர் அவர்களை கூடுதல் சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டதன்பேரில் சங்கரன்கோவில் டவுண் காவல்நிலைய இரண்டாம்நிலை காவலர் வினித் என்பவர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளர். மேலும் அரசு தரப்பில் புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து அ.சா.ஆ.1 ஆகவும், புகார்மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் சாட்சிபட்டியலில் கண்ட மற்ற சாட்சிகளை விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்க அரசு தரப்பில் மேலொப்பம் செய்யப்பட்டதன்பேரில் ஏனைய சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இவ்வழக்கில் அரசு தரப்பில் சான்றுப் பொருள்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இவ்வழக்கின், எதிரி தரப்பில் சாட்சியும் விசாரிக்கப்படவில்லை, எதிரி தரப்பில் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து வெளியாகும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :</u>

5.1. இந்த வழக்கில் அ.சா.1 ஆக நிகழ்நிலைபுகார்தாராக சொல்லப்படும் துரைபதி என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது முதல் விசாரணையில், 'தான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரி எனது கணவர் என்றும், தற்போது தான் தனது கணவருடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறேன் என்றும், அவர்களுக்குள் அவ்வப்போது சிறு மனஸ்தாபம்

ஏற்படும் அதுபோல 2014ம் வருடம் ஜூலை மாதம் ஒரு நாள் தனக்கும், தனது கணவருக்கும் சிறு மனஸ்தாபம் ஏற்பட்டதால் சங்கரன்கோவில் காவல்நிலையம் சென்றேன் என்றும், காவல்நிலையத்தில் வைத்து தன்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், தற்போது தானும், எதிரியும் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றும், சமாதானமனு தாக்கல் செய்து சமாதான மனுவில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், சமாதான மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும், ' சாட்சியம் அளித்துள்ளார்.

5.2. அ.சா.2 வினித் தனது முதல் விசாரணையில், ' தான் தற்போது சங்கரன்கோவில் நகர் காவல்நிலையத்தில் இரண்டாம்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜேந்திரன் மற்றும் விசாரணை அதிகாரி பண்டாரம் ஆகியோரின் கையொப்பங்கள் தனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கின் ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 16.07.2014ம் தேதி காலை 9 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜேந்திரன் என்பவர் நிலையப்பொறுப்பில் இருந்தபோது அங்கு வந்த துரைபதி அளித்த புகார் மனுவை பெற்று நிலையம் வந்து அதன்தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.487/2014, ச/பி.452, 294(பி), 506(1) இதச படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், அதன் அசல் நகலை சங்கரன்கோவில் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து, ஒரு நகலை விசாரணைக்காக விசாரணை அதிகாரி பார்வைக்கு வைத்தார் என்றும், பின்னர் வழக்கு கோப்பினை விசாரணை அதிகாரி பண்டாரம் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் மாரியப்பன்,

முத்துசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், அவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகளான துரைபதி, மாலையம்மாள், சந்தனமாரி, கண்ணகி, முத்துசாமி மற்றும் சம்பவ இட சாட்சிகள் மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தார் என்றும், எதிரியை 16.07.2014 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார் என்றும், அத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும்', சாட்சியம் அளித்துள்ளார்.

5.3. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து, கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)ன் படி வினவியபோது, எதிரி அவற்றை பொய் சாட்சியம் என கூறி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தார். மேலும் எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சியம் யாருமில்லை என்று கூறியதால், எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. மேலும் எதிரி தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

5.4. இரு தரப்பு வாதங்கள் கூர்ந்து கேட்கப்பட்டன. சாட்சிய சான்றாவணங்கள் கவனமாக பரிசிலீக்கப்பட்டன.

5.5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய ஆய்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,

5.6. எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 451, 294(பி), 506(2) ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதாகும்.

6. **<u>பிரச்சனைக்கான தீர்வு:</u>**

6.1 அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தனது வாதத்தில் இவ்வழக்கு நிகழ்நிலைபுகார்தாரராக சொல்லப்படும் அ.சா.1 துரைபதி அரசு தரப்புக்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ள போதும், இவ்வழக்கு சம்பவத்தை பொறுத்தும் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியால் சேகரிக்கப்பட்ட சாட்சியங்கள் குறித்தும், அ.சா.2 விரிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியங்கள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்கிறது என்றும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

6.2. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் நிகழ்நிலைபுகார்தாரராக சொல்லப்படும் அ.சா.1 அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், வழக்கு பற்றி எதுவும் சொல்ல விரும்பவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே எதிரியை இவ்வழக்கில் இருந்து விடுவித்து தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

6.3. இரு தரப்பு வாதங்கள் மற்றும் சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பு வழக்கின்படி எதிரி அரசு தரப்பு பட்டியல் சாட்சி 1ஐ அவதூறாக பேசியும், எதிரி அரசு தரப்பு பட்டியல் சாட்சி 1க்கு கொலைமிரட்டல் விடுத்ததாகவும் எதிரிக்கு எதிராக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

6.4 அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் நிகழ்நிலைபுகார்தாரராக சொல்லப்படும் துரைபதி என்பவர் இந்த வழக்கில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ஷை அ.சா.1 தனது முதல் விசாரணையில்,

" நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது கணவர். தற்போது நான் எனது கணவருடன்

சேர்ந்து வாழ்ந்து வருகிறேன். எங்களுக்குள் அவ்வப்போது சிறு மனஸ்தாபம் ஏற்படும் அதுபோல 2014ம் வருடம் ஜூலை மாதம் ஒரு நாள் எனக்கும், எனது கணவருக்கும் சிறு மனஸ்தாபம் ஏற்பட்டதால் சங்கரன்கோவில் காவல்நிலையம் சென்றேன். காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். தற்போது நானும், எதிரியும் சமாதானமாக சென்றுவிட்டோம். சமாதானமனு தாக்கல் செய்து சமாதான மனுவில் கையெழுத்து செய்துள்ளேன். சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை."

என்று, அரசுத் தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்து, அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார். மேலும், அ.சா.1 அரசுத் தரப்பில் பிறழ் சாட்சிகளாக கருதப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை செய்தபோதும், அரசுத் தரப்பு வழக்கிற்கு ஆதரவாகவும், அனுசரணையாகவும் அ.சா.1ன் குறுக்கு விசாரணையிலிருந்து எவ்வித சங்கதிகளும் வெளிக்கொணரப்படவில்லை. எனவே, அ.சா.1–ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

6.5. அ.சா.2 ஆன காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை பரிசீலிக்கையில் அவர் தனது முதல் விசாரணையில், இறுதியறிக்கையில் சொல்லப்பட்டுள்ள அரசு வழக்கிற்கு ஆதரவாக வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2ன் சாட்சியத்தின் மூலம், இவ்வழக்கின் புகார் மனு சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை குறித்தும், விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் குறித்தும் மட்டுமே தெரிய வருகிறது. இந்நிலையில் இவ்வழக்கில் நிகழ்நிலைபுகார்தாரரும் சம்பவத்தால்

பாதிக்கப்பட்டவருமாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், வழக்கு கோப்புகளை மட்டுமே பார்வையிட்டு அதனடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.2–ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்க இயலாது. எனவே எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 451, 294(பி), 506(2)ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, அவர் குற்றவாளி இல்லை என்றும், முடிவு செய்து அவ்வாறே இவ்வழக்கில் தீர்வு காணப்படுகிறது.

**இறுதியாக,** எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 451, 294(பி), 506(2)ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுளை பொறுத்து அவர் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, கு.வி.மு.ச 248 (1)ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி ஏற்கனவே இவ்வழக்கு சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் வழுங்கியிருந்த பிணைமுறி பத்திரத்தை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாததால் அது பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 07ஆம் நாளான இன்று என்னால் இந்தத் தீர்ப்புரை அவையறிப்பகரப்பட்டது.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.03.07 16:57:06 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி/ நீதிதுறை நடுவர்

சங்கரன்கோவில்.

**அரசுத் தரப்பு சாட்சிகள்:**

1. அ.சா.1 துரைபதி (நிகழ்நிலைபுகார்தாரர்)

2. அ.சா.2 திரு.வினித் (இரண்டாம்நிலைக் காவலர்)

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | -- | புகார் மனுவிலுள்ள அ.சா.1 ன் கையெழுத்து |
| 2. | அ.சா.ஆ.2 | -- | புகார்மனு |
| 3. | அ.சா.ஆ.3 | -- | முதல் தகவல் அறிக்கை |
| 4. | அ.சா.ஆ.4 | -- | பார்வை மகஜர் |
| 5. | அ.சா.ஆ.5 | -- | மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.03.07 16:57:11 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி/ நீதிதுறை நடுவர்
சங்கரன்கோவில்.